[1975 மார்ச் 22

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நாட்டு வாழை அல்லது ஏற்றன் வாழை பயிர் செய்தால் அதிக உற்பத்தி கிடைக்கிறது என்பது உண்மை. ஆனால் நாட்டு வாழை இராமநாதபுரத்திலிருந்து சென்னைக்கு வருவதற்குள் கூட கெட்டுவிடுகிறது. மற்றபடி தண்ணீர் அதிகம் இருக்கக் கூடிய பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது என்று சொன்னேன். மானாமதுரை பகுதியில் தண்ணீர் வசதி அதிகமாக இருந்தால் டெமான்ஸ்டிரேஷன் பிளாட் போட்டு, மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல் படுத்த முடியுமா என்பது பற்றி பரிசீலனை செய்யலாம்.

*Cultivation of vegetables in Kolli Hills.*

* 424 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to cultivate English vegetables on a large scale in Kolli hills; and

(*b*) if so, the details of the scheme now being implemented in the Kolli hills for the cultivation of plains and hill vegetables ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) ஆம். (இ) கொல்லி மலையில் 320 ஏக்கர் நிலத்தில் ஆங்கிலக் காய் கறி வகைகள் —காபேஜ், பீட்ரூட் போன்றவை—பயிரிடும் மேம்பாட்டுத் திட்டம் செயல் படுகிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் ஏராளமான நீரூற்று இருக்கிறது. அன்னாசி, பலா போன்ற பழ வகைகள் நிறைய அங்கே பயிராகின்றன. நல்ல நீரூற்று இருப்பதால் மேல்நாட்டு காய்கறி வகைகளை அங்கே உற்பத்தி செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நல்ல தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மட்டுமல்ல, வாழைப் பயிருக்கு மானியம் அளிக்கப்படுவதில்லை என்று சொன்னேன்; கொல்லிமலையில் புதிய வகை ஆங்கிலக் காய்கறிவகைகள் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படுவதற்காக விவசாயிகளுக்கு அந்த உற்பத்திச் செலவில் 50 சத விகிதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. கு. அ. பொம்மன்: நமது மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் இங்கிலீஷ் காய்கறிகள் அதிகமாகப் பயிரிடப்படுகிறது? அவற்றை விற்பனை செய்வதற்கு அங்கங்கே மார்க்கெட் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா? மேலும் விவசாயிகளை ஊக்குவிக்க அந்த மாவட்ட விவசாயிகளுக்குப் பூச்சிக் கொல்லி மருந்துகளை மானியமாகத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். நீலகிரி மாவட்டத்தில்தான் இண்டோ ஜெர்மன் ப்ராஜெக்ட் என்று எடுத்துக் கொண்டு ஏராளமான பணச் செலவில் இந்தக்

1975 மார்ச 22]

காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றை விற்பனை செய்வதற்கும் மார்க்கெட்டிங் சொஸைடி இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது.

திரு. வ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கிலீஷ் வெஜிடபிள் என்று சொல்கிறார்களே, அது இங்கிலீஷ் பேசுமா என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திரு. பழனிசாமி அவர்கள் கேள்வி போடும்போது இங்கிலீஷ் வெஜிடபிள் என்று கேட்டிருந்தார்கள். அவர் காலிப்ளவர், காபேஜ், பீட்ரூட் போன்றவற்றை மனதில் வைத்து அந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார்கள் என்ற எண்ணத்தில் நான் பதில் சொன்னேன்.

தென்னை வளர்ப்பு.

*425 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணப்பாறை வட்டத்தில், தென்னை வளர்ப்புத் திட்டம் ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இது அரசின் ஆய்வில் இருக்கிறது.

*426 வினா— திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை; திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை மகசூலை அதிகரிப்பதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை மகசூலை அதிகரிப்பதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசு பரிசீலினையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். பரிசீலனை முடிந்து தென்னை வளர்ப்பு சம்பந்தமான சிறப்புத் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மணப்பாறையில் துவக்கப்பட்டிருக்கிற தென்னை வளர்ப்புத் திட்டத்திற்கு எந்தப் பகுதியை அரசாங்கம் தேர்ந்தெடுத்திருக்கிறது ? அதில் யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைத்து தென்னைக் கன்றை வைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?